
# கண்ணப்பநாயனார்
# கும்மிப்பாடல்



ஆக்கம்
வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



அன்பான சைவமெய்யடியார்களே! புனித வெண்ணீறணியும் புண்ணியசீலர்களே! நாம் வணங்கும் ஒவவொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு புராணக் கதைகள் இருக்கின்றன. அதாவது! விநாயகர் புராணம், சிவபுராணம், கந்தப்புராணம, விஸ்ணுபுராணம் என்று இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவைகளிலே அடியவர்களின் பெருமையைக் கூறும் புராணத்தை மட்டும் பெரியபுராணம் என்று சொல்வார்கள் அதிலே அறுபத்து மூன்று நாயன் மார்களின் கதையைக் கூறியுள்ளார்கள். அவர்களிலே கண்ணப்பநாயனாரின் வரலாற்றை கும்மிப் பாடலாக, நான் கற்றுணர்ந்த வகைக்கும் கவிதையாக்கி இசையோடு பாடும் பாடலாக இயற்றியுள்ளேன். இதில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இது
வைரமுத்து கணேசன்
கலைமகள் வீதி
சேனைக்குடியிருப்பு - 02
கல்முனை.
**Te: 071 9238566**

**16.07.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணப்பநாயனார் கும்மிப்பாடல்

01. நினைப்பதையெல்லாம் நிறைவேற்றி - நெஞ்சில்
நித்தம் அமர்ந்து அருள் வழங்கும்
பானை வயிற்றுப் பரம்பொருளே - நல்ல
பழம்தமிழ் நற்கவி தாருமையா.

02. கண்ணப்பநாயனார் தம்கதையை - நான்
கருத்தோடு இப்போ பாடுதற்கு
பொன்னம்பலத்துறை நாயகமே - உன்னை
போற்றிப் பணிந்தேன் அருள்தருவாய்

03. சிந்தை மகிழத் தமிழ் பாடும் - அந்த
சிறந்த பாரத நாட்டினிலே
பொத்தப்பியென்னும் நகர்தனிலே - அங்கே
பொறுமையாய் வேடர்கள் வாழ்கையிலே

04. வேடுவர் கூட்டம் நிறைந்திருக்கும் - அந்த
விவேகமுள்ள ஊர்களிலே
உடுப்பூர் என்னும் ஓரூரில் - அன்று
உத்தம குணத்தோடு வாழ்ந்துவந்த

05. நாகன் என்னும் பெரும்தலைவன் - அவன்
நற்பேறு பெற்று வாழ்ந்தாலும்
வேகமாய் உயிர்வதை செய்வதிலே - என்றும்
விருப்பம் கொண்டு மகிழ்ந்திருந்தான்.

06. இப்படியிருக்கும் நாளையிலே - அன்று
இவனுக்குத் திருமணம் செய்யவென்று
ஒப்புள்ள மாதாம் தத்தையென்று - அப்போ
ஒருமித்து மணமும் தான்புரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. மக்கட்பேறு இல்லாமல் - அவன்
மனம்நொந்து தினமும் தான்வாடி
தக்கபுகழோடு எம்குலத்தில் - அன்று
தங்கை வள்ளியைத் தேர்ந்தெடுத்த

08. முத்துக்குமரன் அடிபணிந்து - அவன்
முன்வைத்தான் தனது கோரிக்கையை
எந்தை குலத்துக் கதி பதியே - இனி
எனக்குப்பிள்ளை வரம்தாரும்

09. உந்தன் சித்தம் மகிழ்வதற்கு - நான்
உற்றபரிகாரம் தேடிக் கொண்டு
சிந்தனை வைத்து இப்போது - பெரும்
சீரும் சிறப்போடு வந்தேனென்று

10. இறைச்சியும் தேனும் மற்றுமுள்ள - நல்ல
இனிப்பான கனிவகை தான் குவித்து
பறையோடு மேளம் தான்முழங்க - அந்த
பச்சை மயிலேறும் வாகனரை

11. வாழ்த்தி வணங்கி அடிபணிந்து - வேலன்
வரமீய வேண்டும் என நினைத்து
நாளும் புகழோடு வாழ்ந்திருக்கும் - ஒரு
நாயகன் தன்னைத் தானீந்தார்

12. நாகன் மனைவி தத்தையுமே - அன்று
நல்லபடியவள் கற்பமுற்று
அகமகிழ்ந்தொரு ஆண் மகவை - அவள்
அன்போடு பின்னே ஈன் றெடுக்க

13. மகன் பிறந்தான் என்று சொல்லி -நாகன்
மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவனாய்
வாகாயெடுத்து அணைக்கையிலே - உடல்
வன்மையாய் இருப்பதைக் கண்டவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. திண்ணன் என்று பெயர் சூட்டி - அவன்
தித்திக்க மகனைத் தானனைத்து
எண்ணம் போல் சடங்கும் கொண்டாடி - மிகு
ஏற்றகளிப்போடு வாழ்க்கையிலே

15. வயதுக்குத்தகுந்த களிப்போடு - பாலன்
வளர்ந்து வருகின்ற நாளையிலே
புய பலம் கொள்ளும் வயதுவர - நாகன்
புன்னகையோடு குருமாரை

16. இன்முகத்தோடு வரவேற்று -நீங்கள்
இன்றுஎன்மகன் திண்ணனுக்கு
நன்றாகக் கலைகள் தான்பயிற்றும் - என்று
நாகனும் அப்போ தானுரைக்க

17. நன்றென்று குருமார் தானழைத்து -அப்போ
நல்லகலையெலாம் தாம்புகட்ட
அன்போடுதிண்ணனும் தான்பயின்று - பெரும்
ஆண் சிங்கம்போல யிருக்கையிலே

18. வயதும் பதினாறு சரியாகத் - தந்தை
வாலிபனான தன்மகனின்
புயபலம் கண்டு அகமகிழ்ந்து - அவன்
புன்சிரிப்போடு அருகணைத்து

19. வேடர்குலத்துக் கதிபதியாய் -மகன்
விளங்கவேண்டும் என்று சொல்லி
நாடளாவிய வேடுவரை -அவன்
நாழிகைக்குள்ளே தானழைத்து

20. கன்னிவேட்டையாடுதற்கு - மகன்
கருதிலுந்தி யிருப்பதனால்
என்மகனோடு காடேகி - நீங்கள்
இனிதாக வேட்டை யாடுமென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நலிந்து போன உடல்கொண்ட - அந்த
நாகன் தனக்கு மேலாக
வாலிப வயதுத் திண்ணனென்றால் -மற்றோர்
வரிந்து கட்டி முன்நின்றனரே.

22. கன்னிவேட்டை யாடுமுன்னே -அப்போ
கானகத்தேவதை தங்கழுக்கு
முன்னிலும் பார்க்கப் பெருவிருந்து - என்று
மூத்த தேவ ராட்டி தன்னை.

23. நாகனும் அங்கே வரவளைத்து - பெரும்
நல்ல விருந் தெல்லாம் தான்படைத்து
மகனுக்கு நல்லாசி தான்கூறி - அவன்
மகிழ்வோடு வேட்டைக்கு செல்லுமென்றான்.

24. வேடர்குலத்தைச் சேர்ந்தவர்கள் -அப்போ
வில்லம்பு ஈட்டி கையேந்தி
ஆடல்பாடல்செய்து அகமகிழ்ந்து -நல்ல
ஆனந்தக் கூத்தும் அடினரே.

25. காட்டுமிருகத்தை வேட்டையாடி - நன்கு
களிப்புற்ருக்க வேண்டு மென்று
கூட்டமாய்க் காட்டிலேதான்புகுந்து - மற்ற
கொம்பும் சங்கும் தானூத

26. காட்டு மிருகங்கள் தானோட -பின்னே
கடிக்கும் நாய்கள் தான் துரத்த
மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவர்கள் - மற்ற
மான்மரையெல்லாம் தான்வதைக்க

27. திண்ணனும் தனது நண்பர்களும் - நல்ல
திடமான பன்றி ஒன்றைக்கண்டு
இன்று இதைக் கொல்ல வேண்டும் -என்று
இளைக்காமல் பின்னே தான்துரத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. காடனும் நாணனும் திண்ணனுமாய் -அதை
காட்டிலே வெகுதூரம் தான் விரட்ட
ஓடிய களைப்பால் பன்றியுமே - அப்போ
ஓடமுடியாமல் தான்படுக்க

29. களைத்துவிழுந்த பன்றிதன்னைத் - திண்ணன்
கைவில்லால் கொல்வது பாவமென்று
வாளையுருவித் தானெடுத்து - அவன்
வதைத்தான் இரண்டுகூறாக

30. ஓடியகளைப்பால் தாகம்பசி -அப்போ
ஒன்றாகவந்து தான் சேர
குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று - திண்ணன்
கூடவந்தோரைத் தான்கேட்க

31. இன்னும்சற்றுத் தூரம்சென்றால் -நல்ல
இதமானகுளிர்ந்த நீருக்கும்
பொன்முகலியாறு போகிறது - அங்கு
போனால்தான் தண்ணீர் என்று சொல்ல

32. பன்றியை அங்கே கொண்டுசென்றால் - நன்கு
பதமாக்கியுண்டு களையாறி
இன்று நாம் திரும்பலாம் என்றுசொல்ல - திண்ணன்
இருவரும் பன்றியைத் தானெடுக்க

33. சற்றே தூரம் சென்றவுடன் - அங்கே
சமிபத்தில் காளாத்தி மலைகாண
உற்றுநோக்கிய திண்ணனாரும் - இதில்
உள்ள விஷேசம் என்னவென்றார்.

34. திருக்காளாத்தி என்றுசொல்வார் - அங்கே
திருமுடி குடும்பித் தேவருண்டு
அருமையாய் பலகாட்சி கண்டிடலாம் - என்று
அப்போதே நாணன் தானுரைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஆற்றங் கரையை தானடைந்து - அங்கே
அழகானநிழலைத் தேர்ந்தெடுத்து
சற்றேநேரத்தில் பதப்படுத்தும் - என்று
சாற்றினார்காடன் தனைப்பார்த்து

36. திண்ணனும் நாணனும் அப்போது - அந்த
திருக்காளாத்தி மலைநோக்கி
பொன்முகலியாற்றை தான்தாண்டி - திண்ணன்
போகின்றபோது தன்னுள்ளே

37. என்றுமறியாப் புதுஉணர்வு - தன்
எண்ணத்தில் வந்துசேர்ந்ததுபோல்
திண்ணனைமுன்னே தானிழுக்க -அவன்
சிந்தை மகிழ்ந்து நாணனிடம்

38. உடம்பின் பாரம் குறைவதுபோல் - என்
உள்ளத்தினுள்ளே தோன்றுதடா
கடக்கும் தூரம் குறையுதடா - எல்லாம்
காற்றுப்போலெனக்கு தோணுதடா.

39. நெஞ்சமினிக்கும் றீங்காரம் -இப்போ
நிகரின்றிக்காது சுவைக்கிறது
பஞ்சதுத்துபி ஓசையதோ - என்று
பாசமுடன் திண்ணன் தான்கேட்க

40. மலைத்தேன் வதைகளைமொய்த்திருக்கும் - அந்த
மாபெரும் தேனீக்கள் ஓசையிது
அலைபாயும் கடலலை ஓசையைப்போல் - இது
ஆனந்தமூட்டும் என்றுசொன்னான்

41. திண்ணன்மலைமீ தேறுமுன்னே -சிவன்
திருக்கண்பார்வை தான்செலுத்த
பொன்னான அருள்மொழி தான்பாய -மேலும்
பொங்கிய பக்தி மேலோங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. உச்சிமலைக்குப் போனதுமே - திண்ணன்
உள்ளம் உந்திய உந்துதலால்
இச்சையுடனே ஓடிச்சென்று - வெகு
இன்பமாய்க்கட்டி அரவணைத்து

43. முத்தமிட்டு அகமகிழ்ந்து - திண்ணன்
மூச்சுமுட்டத் தான்தழுவி
இத்தனைநாளும் தனியாக - நீர்
இங்கே அமர்தது ஏனோவென்று

44. இன்னும் ஏதேதோ தான்புகன்று - திண்ணன்
இறுகக் கட்டி அரவணைத்து
அன்பே நானுன்னை விட்டுவிட்டு -இந்த
அடியேன் எங்கேயும் போகமாட்டேன்

45. நேரமும் உச்சியாய்ப் போனதுவே - இப்போ
நிச்சயம் நீயும் பசித்திருப்பாய்
ஆகாரம் கொண்டு நான்வருவேன் -என்று
ஆனந்தம் பொங்கத் திண்ணனுமே

46. பிரியமனமு மில்லாமல் -சற்று
பிரியா விடையும் பெற்றுக்கொண்டு
அரிதாக மலையின் அடிவாரம் - வந்து
அங்கேவதக்கிய பன்றிதன்னை

47. சுவையானபாகங்கள் அத்தனையுத் - திண்ணன்
சுவைத்துப்பார்த்து வகுந்தெடுத்து
இவையாவும் நல்லது என்று எண்ணி -அவன்
இலைக்கலத்திலே வைக்கையிலே

48. நாணனும் காடனும் பார்த்திருந்து - இவன்
நமக்கும் இல்லாமல் அத்தனையும்
வீணாக்கப்போவது மட்டுமல்ல - இது
விரும்பத்தாகாது என்று சொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. கொன்றை மலர்சூடும் தேவருக்கு - இவன்
கொடுக்கிறான் இறைச்சியை என்றுசொன்னால்
நன்றாகப் பித்தம்பிடித்திருக்கு - இனி
நாமொன்றும் சொல்ல முடியாது

50. இவர்கள் கதையெலாம் கேளாமல் - திண்ணன்
இதமாய்ப்பதமாய் வதக்கியதை
அவருக்களித்திட வேண்டுமென்று - அவன்
அவற்றைக் கையிலே தானெடுத்து

51. காட்டுமலர் இலை தான்கொய்து - திண்ணன்
தலையில் குடுமியில் தான் சொருகி
கட்டுக்கடங்கா பக்தியுடன் - அவன்
கங்கைகடந்து செல்கையிலே

52. வாயிலேநீரை மென்று கொண்டு - இதோ
வருகிறேன்அத்தோ என்று சொல்லி
பாய்ந்து ஓடி மலையேறி - அவன்
பரம்பொருள் பக்கம் தான்நாடி

53. பெருமான் முடியின் மேலிருந்த - அந்த
பெருமைகொள் மலர்கள் அத்தனையும்
செருப்புக்காலால் விலக்கிவிட்டு - அவர்
திருமுடிமீது நீராட்டி

54. குடுமியிலிருந்த மலர் இலையை -அவன்
குணசீலன் முடியில் தான்தரித்து
எடுத்துவைத்தார் ஊனமுதை -இனி
எந்தன் பிரானே உண்ணுமென்று

55. ஆண்டவனேயெல்லாம் நான்சுவைத்து - அதில்
அதிக சுவையுள்ள பாகங்களை
கொண்டுவந்தனே பசியாறும் - என்று
கூப்பியிருகரம் தாழ்பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. ஊட்டிய அமுதால் அகமகிழ்ந்து -திண்ணன்
உளமார ஆனந்தக் கூத்தாடி
காட்டுமிருகம் நெருங்காமல் -நான்
காவல் காத்திப்போ நிற்பேனென்றான்

57. கதிரவன் இவையெல்லாம் பார்த்துக்கொண்டு - தன்
கதிர்களைமடக்கித் தான்மறைத்து
அதிகாலைவந்து பார்ப்போமென்று - அவன்
அலைகடலிலே அஸ்த்தமிக்க

58. காரிருள் வந்து சூழ்ந்ததினால் - இனி
காட்டு மிருகம் வருகுமென்று
பூரித்தபுயத்தி வில்லேந்தி -திண்ணன்
புலருமட்டும் காவல் நின்று

59. கதிரவன் வந்து உதிக்குமுன்னே -திண்ணன்
காட்டுமிருகத்தை வேட்டையாடி
புதிதாக உணவு தான்படைக்க - அவன்
புறப்பட்டுப்போக மனமுமின்றி

60. ஒட்டி உறவாடிமுத்தமிட்டு -திண்ணன்
ஒருமனதாக அடிதொழுது
காட்டிலேவேட்டை நானாடி - வெகு
கடுகதியாக வருவேனென்று

61. திண்ணன் புறப்பட்டுப் போனபின்பு -நித்தம்
திருமுடிமீது மலர் சூட்டும்
அன்பன்சிவகோ சாரியாரும் -அந்த
அதிகாலை நேரம் வந்தனரே

62. எப்போதும் தப்பாமல் மலர்சாத்தி - அவர்
எம்பெருமான் பாதம் தான் பணிந்து
முப்புரமெரித்த கண்ணுதலே - என்று
முழுமனதாக வணங்குபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. அங்கேவந்து பார்த்ததுமே - அவர்
அதிசயம் கண்டு அகம்நொந்து
இங்கே இச்செயல் செய்தவர்யார் -அந்த
இரக்கமில்லா வேடர்களா

64. மாமிச உணவைக் கொண்டுவந்து -யாரோ
மதிகெட்ட ஒருவன் வைத்திருக்கான்
சாமி இதனைப் பார்த்திருக்கார் -நல்ல
சரியான தண்டனை கொடுக்கலையோ

65. என்று சிவகோச் சாரியாரும் -நின்று
ஏங்கிமனது மிகவாடி
கண்ணாலே பார்ப்பதும் பாவமென்று - அவர்
கடுகியே ஒரு புறம் தானொதுங்கி

66. பொன் முகலி ஆற்றினிலே -அவர்
போய் நல்லநீரும் மென்றுவந்து
நன்றாய் நீராட்டி மலர்சூட்டி - அன்று
நமஸ்க்காரம்செய்து சென்றபின்னே

67. இப்படியிருக்கும் வேளையிலே -நேற்று
இடையிலே திண்ணனை விட்டுச் சென்று
தப்பாமல் எல்லாம் எடுத்துரைக்க -வெகு
தாமதமில்லாமல் ஓடிச்சென்ற

68. நாணனும் காடனும் நாடேகி - வந்து
நாகனின் முன்னே தெண்டனிட்டு
காணாத காட்சியைக் கண்டதுபோல் -திண்ணன்
காட்டியபுதுமையை எடுத்தோத

69. தெய்வச் செயலாய் இருந்தாலும் - நம்ம
தேவராட்டியைக் கொண்டு சென்று
உய்யவளிநாம் தேடிடுவோம் - என்று
உள்ளம்வருந்தி நாகன் சொன்னான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. உள்ளத்தைக்களாத்தி மலையில்விட்டு -வெறும்
உடலோடு வனத்திலே சென்றதிண்ணன்
தெள்ளத்தெளிந்த பெருமிருகம் - எல்லாம்
தேடியே வேட்டை தானாடி

71. மான் மரை பன்றி அத்தனையும் -அவன்
மகிழ்வோடு வேட்டை யாடிவந்து
நன்றாக சதையைக் கொய்தெடுத்து -அதை
நல்லநெருப்பிலே தான்வாட்டி

72. மலைத்தேனைப் பிளிந்து புரட்டிவைத்து - அதன்
மணத்தையுணர்ந்து சுவைபார்த்து
இலையால் செய்த கலத்தினிலே - அதை
இதமாய் அடுக்கித் தானெடுத்து

73. முன்போல் இலைமலர் நீரெடுத்து - திண்ணன்
முழுமூச்சாய் மலையின் மீதேறி
அன்பு பொங்கி அலைபாய - அவன்
அப்பன் திருமுடி நீராட்டி

74. மலரும் இலையும் தான்சாத்தி -திண்ணன்
மகிழ்வோடு அமுதை முனேவைத்து
நலமானசுவையாய் இதுயிருக்கும் -இதை
நானே சுவைபார்த்து வைத்திருக்கேன்

75. நேற்று உண்டது சுவையல்ல - இது
நிச்சயம் சுவையாய் தானிருக்கும்
பற்றோடு இதனை உண்ணுமென்று -அந்த
பரமசிவனையே வேண்டிநின்றார்

76. அன்று இரவும் முன்போலத் - திண்ணன்
அதிகாலை வரையும் காவல்நின்று
அன்பனே அமுது செய்வதற்கு - நான்
அமைவான மிருகம் தேடப்போறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. திண்ணன் புறப்பட்டுப் போனபின்பு - அந்த
சிவகோச்சாரியார் அங்கேவந்து
கொன்றைமலரோடு பலமலரும் - கொண்டு
கோவானசிவபாதம் பணியவந்தார்.

78. வந்தும் இருந்ததைக் கண்டவுடன் - அவர்
வருத்தம் கொண்டு மனம்வருந்தி
சிந்திக்காமல் செய்தார்க்கு - அப்பா
திருவுளம் இரங்கி இருப்பதுவேன்

79. என்று சிவகோச் சாரியாரும் - அன்று
இதயம் நொந்து மனம் வெதும்பி
என்னப்பா அபசாரம் செய்தார்க்கு - நீர்
ஏற்ற தண்டனை கொடுத்தருளும்

80. என்னாமும் இப்படி யென்றுசொன்னால் - அப்பா
என்னால் சகிக்க முடியாது
உன்னருளை நீயும்காட்டுமென்று - அவர்
உறைவிடம் நோக்கிப்போனபின்பு

81. அன்போடு திண்ணனும் வேட்டையாடி - அன்று
அவன் கொன்ற மிருகம் அத்தனையும்
ஒன்றாகச்சேர்த்து உரித்தெடுத்து - அதில்
உருசியுள்ள பாகங்களை

82. நன்றாகத்தீயிலே தான்வாட்டித் - திண்ணன்
நல்ல ருசிபார்த்து தேர்ந் தெடுத்து
இன்று உமக்கு நல்விருந்து - என்று
எல்லாமேகல்லையில் சுற்றிக்கொண்டு

83. வளக்கம்போல் மலரும் நீரோடும் - அவன்
வந்து நீராட்டி மலர்சூட்டி
இழகிய தேனில் வதக்கிவந்தேன் - இது
இதமாக இருக்கும் சுவையுமென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. அந்த நிமிசமே வைத்துவிட்டுத் - திண்ணன்
ஆனந்தம் கொண்டு பரவசமாய்
வந்தேனே நானுந்தன் துணையாக - என்று
வாழ்த்தி வணங்கி யடிபணிந்து

85. அன்று இரவும் காவல்நின்று - அவன்
அடுத்த நாள் வேட்டைக்குப் போகையிலே
நண்பனாம் காடனும் நாணன் சொன்ன -அந்த
நாவினிக்காத செய்திகேட்ட

86. வேடர்தலைவன் நாகனோடு - மற்ற
வேடுவரெல்லாம் சேர்ந்து வந்து
ஆடவைத்துதேவ ராட்டிதன்னை - அன்று
அவர்கள் பலவும் செய்துபார்த்தார்

87. ஒன்றுக்குத் திண்ணன் அசையாமல் - தன்
உள்ளத்தேகாளாத்தி நாதரன்பால்
இன்று எல்லோரும் போய்வாரும் - என்று
இசைத்த வசனம் தான்புகன்று

88. மான் மரை பன்றியை தான்வதக்கி - அவன்
மகிழ்ச்சியாத்தேனும் பிளிந்தெடுந்து
இன்று எல்லாமே உகந்ததென்று - திண்ணன்
இனிதாக மலரும் நீரெடுத்து

89. அன்றும் இப்படியே முடிக்க -இது
ஐந்தாம் நாள் என்று சிவன் நினைத்து
அன்பன் சிவகோச் சாரியார்க்கு - அவர்
ஆழ்ந்த உறக்கத்தில் சொல்லலுற்றார்

90. ஊனமுதூட்டும் அன்பனவன் -தன்
உள்ளத்தேஎன்னை வைத்துக்கொண்டு
மனம்போல அமுது ஊட்டுகிறான் - அது
மகிழ்ச்சியெனக்கு என்று சொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. என்மகன் முருகன் எனையணைத்து - அன்று
எட்டியுதைத்த அதேஇன்பம்
இன்றுதான் அன்பனால் அனுபவித்தேன் - என்று
ஈசனுமப்போ தான்கூறி

92. நாளை அங்கே மறைந்திருந்து - நீயும்
நடப்பதையெல்லாம் பாருமென்று
காளையேறும் எம்பெருமான் - அவர்
கனவிலே தோன்றிச் சொன்னவுடன்

93. சிவகோச்சாரியார் எழுந்திருந்து - சிவன்
திருவருள் தன்னை தானினைத்து
சிவனேயுன்தன் சித்தமென்று - அவர்
திரும்பவும் உறக்கம் கொள்ளாமல்

94. பொழுதுபுலருமுன் கடன்முடித்து - அவர்
பொன்முகலியாற்றை தான்தாண்டி
காளாத்தியப்பர் திருவடியில் - அங்கே
கண்ட அபச்சாரம் சுத்திபண்ணி

95. ஆற்று நீர் கொண்டு நீராட்டி - அவர்
அன்றலர்ந்தமலர் தான்சாத்தி
பற்றோடு பரமனடி பணிந்து -சிவன்
பகன்றது பொல மறைந்து நின்றார்

96. காளாத்தியப்பர் பசித்திருப்பார் -என்று
கடுகிநடந்து திண்ணனாரும்
வளமாகவதக்கிய ஊனமுது - ஏந்தி
வருகின்றபோது அவர்நோக்க

97. முக்கண் நாதரின் வலதுகண்ணில் -அப்போ
முத்தாகவுதிரிம் தான்வடிய
திக்கித் திகைத்து எல்லாம்விட்டு - அவர்
திசைகெட்டமான்போல ஓடிவந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. காட்டுமிருகங்கள் செய்ததுவோ -இல்லை
கல்நெஞ்சக்காறன் செய்தானோ
வாட்டியவர்கள் உயிர்குடிப்பேன் -என்று
வலமும் இடமாய்த் தானோடி

99. ஆரத்தழுவி அதைத்துடைக்க -மேலும்
அனேககுருதி தான்பாய
காரமாய் பச்சிலை கொண்டுவந்து - அதை
கசக்கிப்பிழிந்து விடுவேனென்று

100.காடெல்லாம் தேடித்திரிந்து திண்ணன் - எது
கண்ணுக்கு மருந்து என்று சொல்லி
ஓடித்திரிந்து தேர்ந்தெடுத்து -அதை
ஒருநொடியிலே கொண்டுவந்து

101.கசக்கிப்பிழிந்து பக்குவமாய் -அதை
கண்ணிலேயிட்ட பின்னாலும்
கசியும் இரத்தம் நிற்காமல் - மீண்டும்
கசிந்து கொண்டே தானோட

102.மனம்வருந்தித் திண்ண னாரும் - தன்
மனதில் பட்டதை செய்வோனென்று
ஊனுக்கு ஊனே மருந்து என்று -அவர்
உள்ளத்தே யாப்போ தானினைத்து

103.கூரான அம்பொன்றைத் தானெடுத்து - அவர்
கொஞ்சமும் அச்சம் கொள்ளாமல்
நேராகவலக்கண் அகழ்ந்தெடுத்து -அதை
நிர்மலர் கண்ணிலே அப்பிவைக்க

104.இரத்தம் ஓடாமல் நிற்கக்கண்டு திண்ணன்
இதயம் மகிழ்ந்து கூத்தாடி
கரங்கள் தட்டி மனமகிழ்ந்து - அவன்
கண்டேனேமருந்தை என்றுரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105.இடக்கண்ணும் இரத்தம்தான்வடிக்க -திண்ணன்
இதயம் சற்றும் கலங்காமல்
அடக்கமாய் இடக்கண் அகழ்ந்தெடுத்து -நான்
அப்புவேன் இப்போ என்று சொல்லி

106.இருக்கும் கண்ணை எடுத்து விட்டால் -நான்
இடம் காணமுடியாதே என்று எண்ணி
செருப்புக்காலைத் தானூன்றி - அவர்
செவ்வையாய் இவ்விடம் அப்பவென்று

107.அம்பையெடுத்து விழிஅகழ -அவர்
ஆரம்பிக்கும் நேரமதில்
எம்பிரான்கையை தானீட்டி -அப்போ
ஏற்றபடியே தான்தடுத்து

108.கண்ணப்பா நில்லு என்றுசொல்லி - சிவன்
கணீரென்ற குரலில் தான் மொழிந்து
என் அன்பன் பக்தியை நான்கண்டேன் - என்
இதயம்குழிர்ந்தது என்றுரைத்தார்.

109.அரும்தவம் செய்யும் தவசிகட்கும் - வெகு
அரிதிலே கிட்டாத நற்பேறு
பெருமையாய் ஆறேநாட்களிலே - பெற்ற
பேரன்பா கண்ணப்பா என்னுடைய

110.வலப்பக்கம் நீயும் அமர்ந்திருந்து - நல்ல
வரம்பல பெற்று எப்போதும்
நலமாக நீயும் வாழ்ந்திடுக -என்று
நல்லாசி கூறித் தான்மறைந்தார்

111.சிவகோச்சாரியார் பார்த்திருந்து - தன்
சித்தத்தினுள்ளே சிவனைவைத்து
சிவனேயுன் திருவிளையாட்டு - இதை
சிறியேன்றானும் அறியமாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112.மன்னிக்கவேண்டும் பராபரனே -எந்தன்
மனதுகுழிர்ந்தது இப்போது
அன்பேசிவமே எனப்பணிந்து -அவர்
அவரது தபோவனம் போய்ச் சேர்த்தார்.

113.கற்சிலையாக அப்போது - அந்த
கண்ணப்ப நாயனார்தாமாறி
நற்பேறுஎன்று இப்போதும் -நம்
கண்முன்னே யென்றும்நிற்பாராம்

114.உண்பதேயமுதம் எனநினைத்து - அன்று
ஊனமுதூட்டி அருள்பெற்ற
கண்ணப்பநாயனார் தாழ்பணிந்து -நித்தம்
கருத்தில்வைத்துப் போற்றிடுவோம்

115.கண்ணப்பநாயனார் தம் கதையை - நான்
கற்றுஅறிந்தவரை யுரைத்தேன்
என்கவி மீது குறைபொறுப்பீர் -கற்று
எல்லாமுணர்ந்த பெரியோரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வெளியீடுகளாக இதுவரை.....

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல், வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாகங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் பத்து, மயானப்பத்து.

04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.

06. கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைப்பத்து, வளிநடைக்கும்மி.

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

11. தசவதாரம் கும்மிப் பாடல்கள்.

12. கண்ணப்பநாயனார் கும்மிப் பாடல்கள்.

Brilliant Prenters - Kalmunai - 067 2229778

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org